முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வள்ளியூர்

முன்னிலை: திருமதி.A.அன்னலெட்சுமி M.L.,

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

வள்ளியூர்

2026 ஆம் வருடம் ஜுலை மாதம் 23-ஆம் நாள், வியாழக்கிழமை

**இ.ம.எண். 08/2026 ன் அ.வ.எண்.202/2016**

1) ஞானசிரோன்மணி (இறப்பு)

2) வேலம்மாள் ... மனுதாரர்கள்/ பிரதிவாதிகள்

/எதிர்/

துரைசிங்கம் ..... எதிர்மனுதாரர்/ வாதி

இம்மனுவானது 29.06.2026 தேதி அன்று என் முன்னால் இறுதியாக விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.ராஜா அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.K.வெங்கடேசன் அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பில் எடுத்துரைத்த வாத உரையை கேட்டும் சாட்சி மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள்வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

**உத்தரவு**

இம்மனுவானது, உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 16 விதி 1ன்கீழ் இராதாபுரம் வட்டாட்சியர் அவர்களை மனுதாரர்கள் தரப்பில் கூடுதல் சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரி இம்மனு இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ANNALAKSHMI Digitally signed by ANNALAKSHMI Date: 2026.07.23 17:45:23 +0530

1) மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவின் சுருக்கம்:-

இம்மனுவின் 2 வது மனுதாரர் அசல் வழக்கில் 2 ம் பிரதிவாதி ஆவார். வழக்கு தபசில் சொத்திற்கு கீழ்பக்கம் மனுதாரருக்கு பாத்தியப்பட்ட புல எண்.2079/3 ல் உள்ள மனை மற்றும் வீடு உள்ளது. வாதி வழக்குரையில் கூறும் பொது முடுக்கு என்பது 2079/3 ல் உள்ள மனுதாரருக்கு பாத்தியப்பட்ட காலிமனையை குறிப்பிடுகிறார், அந்தவகையில் வழக்கு தபசில் சொத்திற்கு கீழ்பக்கம் பொது முடுக்கு இல்லை என்பதையும், மனுதாரருக்கு பாத்தியப்பட்ட இடம் உள்ளது என்பதையும் நிரூபிக்கும் வகைக்கு இராதாபுரம் தாலுகா, வட்டாட்சியர் அவர்களை விசாரணை செய்ய வேண்டியது அவசியமாக உள்ளது என மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

2) எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம்:-

மனுதாரரின் மனு சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் செல்லத்தக்கதல்ல. அசல் வழக்கிற்குரிய பிரச்சினையானது பொது முடுக்கு ஆகும். பிரச்சினைக்குரிய அந்த பொதுப்பாதையை இந்நீதிமன்றத்தால் நியமிக்கப்பட்ட ஆணையர் நேரில் ஆய்வு செய்து, வரைபடத்துடன் கூடிய அறிக்கையைச் சமர்ப்பித்துள்ளார். எதிர்மனுதாரர் தரப்பில் அந்த அறிக்கைக்கு ஆட்சேபனை ஏதும் தெரிவிக்கவில்லை. இரு தரப்பு வாய்மொழிச் சாட்சியங்களும் முடிக்கப்பட்டு, சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. எனவே, இந்நீதிமன்றத்தில் ஏற்கனவே உள்ள ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடத்துடன், வாய்மொழி மற்றும் ஆவணச் சான்றுகளின்

ANNALAKSHMI
Digitally signed by ANNALAKSHMI
Date: 2026.07.23 17:45:29 +0530

அடிப்படையில் இவ்வழக்கை முடிவு செய்யலாம். இவ்வழக்கில் உள்ள பிரச்சினைகளை தீர்ப்பதற்கு இராதாபுரம் தாசில்தாரை அழைக்க வேண்டிய அவசியமில்லை. அசல் வழக்கானது 2016 ம் ஆண்டு முதல் நிலுவையில் உள்ள நிலையில், அசல் வழக்கினை காலதாமதப்படுத்த வேண்டி மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே, இம்மனுவானது தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

<u>இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா?</u>

3. இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. மனு மற்றும் எதிருரை பரிசீலனை செய்யப்பட்டது. மனுதாரர்கள்/ பிரதிவாதிகள் தரப்பில், வழக்கு தபசில் சொத்திற்கு கீழ்பக்கம் மனுதாரருக்கு பாத்தியப்பட்ட புல எண்.2079/3 ல் உள்ள மனை மற்றும் வீடு உள்ளது என்றும், வாதி வழக்குரையில் கூறும் பொது முடுக்கு என்பது 2079/3 ல் உள்ள மனுதாரருக்கு பாத்தியப்பட்ட காலிமனையை குறிப்பிடுகிறார் என்றும், அந்தவகையில் வழக்கு தபசில் சொத்திற்கு கீழ்பக்கம் பொது முடுக்கு இல்லை என்பதையும், மனுதாரருக்கு பாத்தியப்பட்ட இடம் உள்ளது என்பதையும் நிரூபிக்கும் வகைக்கு இராதாபுரம் தாலுகா, வட்டாட்சியர் அவர்களை விசாரணை செய்ய வேண்டியது அவசியமாக உள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அசல் வழக்கானது விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர் /பிரதிவாதி தனது வழக்கை நிரூபிக்க தபசில் சொத்திற்கு கீழ்பக்கம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட 4 புல எண்.2079/3-ல்

ANNALAKSHMI Digitally signed by ANNALAKSHMI Date: 2026.07.23 17:45:36 +0530

மனை மற்றும் வீடு உள்ளது, வழக்குரையில் கூறும் பொது முடுக்கு மனுதாரர் / பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட காலிமனை என்பதை நிரூபிக்க இராதாபுரம் வட்டாட்சியரை விசாரணை செய்வது நீதிக்கு உகந்ததாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. எதிருரையின்படி, இருதரப்பு சாட்சிகள் விசாரித்து முடிக்கப்படவில்லை. 2ம் பிரதிவாதி தரப்பு கூடுதல் சாட்சிக்காக அசல் வழக்கு நிலுவையில் இருக்கும் போது இம்மனு ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும், இம்மனுவினை அனுமதிப்பதால் எதிர்மனுதாரருக்கு எவ்வித கஷ்ட நஷ்டமும் ஏற்படபோவதில்லை என்பதாலும் இம்மனு அனுமதிக்கத்தக்கது ஆகும்.

இறுதியாக, இம்மனு அனுமதிக்கப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2026ம் வருடம் ஜூலை மாதம் 23-ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

ANNALAKSHMI Digitally signed by ANNALAKSHMI Date: 2026.07.23 17:45:54 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

வள்ளியூர்.

<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள்</u>: இல்லை

<u>எதிர்மனுதாரர் தரப்பு சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள்</u>: இல்லை

ANNALAKSHMI Digitally signed by ANNALAKSHMI Date: 2026.07.23 17:45:59 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

வள்ளியூர்.

முு.மா.உ.நீதிமன்றம்,வள்ளியூர்

வரைவு, சீரான உத்தரவு

இ.ம.எண்.08/2026 இன்

அ.வ.எண்.202/2016

தேதி.23.07.2026